
MGS – PAPER 2

**605 / 8**

தொடக்கநிலை 6

# மாதிரி தேர்வுத்தாள்



பெயர் : ____________________

வகுப்பு : ____________________

தேதி : ____________________

| |
|---|
| / 90 |

பெற்றோர் கையொப்பம் : ____________________

A1 வேற்றுமை

MGS – PAPER 2

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q1. "இதுவே என் ______________ குறிக்கோள் ஆகும்" என்றான் மாணவன்.

(1) வாழ்வு
(2) வாழ்வில்
(3) வாழ்வின்
(4) வாழ்வுக்கு ( )

Q2. குற்றம் செய்த அதிகாரி ___________ நீக்கப்பட்டார்.

(1) பதவியில்
(2) பதவிக்கு
(3) பதவியால்
(4) பதவியிலிருந்து ( )

Q3. வெகு நேரமாக என் சிற்றப்பா ஏதோ ___________ ஆழ்ந்திருந்தார்.

(1) சிந்தனையில்
(2) சிந்தனையை
(3) சிந்தனையால்
(4) சிந்தனையோடு ( )

Q4. துறவியின் ______________ கேட்க மக்கள் கோயில் மண்டபத்தில் கூடினர்.

(1) சொற்பொழிவின்
(2) சொற்பொழிவை
(3) சொற்பொழிவால்
(4) சொற்பொழிவுக்கு ( )

Q5. சாடிக்குள் கையை விட்ட சிறுமி தன் ________________ மிட்டாய்களை அள்ளினாள்.

(1) கைவிரல்களில்
(2) கைவிரல்களால்
(3) கைவிரல்களை
(4) கைவிரல்களோடு ( )



More papers at www.testpapersfree.com

<u>A2 செய்யுள் / பழமொழி</u>

**Q6 முதல் Q10 வரையுள்ள <u>செய்யுள் / பழமொழியை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q6. ____________ பாராத வேலை ஒரு முழம் கட்டை.

(1) மற்றவன்
(2) பகைவன்
(3) உறவினன்
(4) உடையவன் ( )

Q7. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
____________ கொல்லும் சினம்.

(1) பிறரையே
(2) தன்னையே
(3) ஒருவரையே
(4) யாவரையுமே ( )

Q8. வல்லவனுக்குப் புல்லும் ____________.

(1) ஆயுதம்
(2) ஞானம்
(3) செல்வம்
(4) ஆபரணம் ( )

Q9. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் ____________
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

(1) ஊரார்
(2) நூலோர்
(3) மூத்தோர்
(4) பெரியோர் ( )

Q10. ____________ செம்பொன் தன்னொளி கெடாது.

(1) சுடினும்
(2) எண்ணும்
(3) சிறிதெனினும்
(4) கொடுத்தாலும் ( )



More papers at www.testpapersfree.com

A3 அடைமொழி / எச்சம்

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q11. மாணவனின் ஐயத்தை ஆசிரியர் ______________ வைத்தார்.

(1) தீர்த்த
(2) தீர்க்க
(3) தீர்த்து
(4) தீர்த்தும் ( )

Q12. வலையில் ____________ அனைத்துப் பறவைகளும் வலையையே தூக்கிக்கொண்டு பறந்தன.

(1) சிக்க
(2) சிக்கி
(3) சிக்கும்
(4) சிக்கிய ( )

Q13. தான் செய்த _____________ செயலை எண்ணி வருந்தினான் பரதன்.

(1) இழிவான
(2) சோகமான
(3) புதுமையான
(4) துணிச்சலான ( )

Q14. வீட்டிலிருந்து ____________ சகோதரர்கள் உணவு விடுதி ஒன்றை அடைந்தார்கள்.

(1) புறப்பட்டு
(2) புறப்பட்ட
(3) புறப்படும்
(4) புறப்படுகிற ( )

Q15. ஹாரி பாட்டர் நூல்கள் நம் சிந்தைக்கு ____________ அமைகின்றன.

(1) சிறப்பாக
(2) விருந்தாக
(3) குதூகலமாக
(4) இடையூறாக ( )



More papers at www.testpapersfree.com

**A 4 முன்னுணர்வுக் கருத்தறிதல்**
**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

ஒருநாள் நள்ளிரவில் முல்லாவின் வீட்டிற்குள் சில திருடர்கள் புகுந்து விலை உயர்ந்த பொருள் ஏதாவது கிடைக்குமா எனத் தேட ஆரம்பித்தனர்.
உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட முல்லா தனது வீட்டுக்குளேயே **Q16** ________________ கண்டுவிட்டார். எனவே, அவர் மெதுவாக எழுந்து அலமாரிக்குள் மறைந்துகொண்டார்.

திருடர்கள் அலமாரியைத் திறக்க வந்தபோது முல்லா அதற்குள் இருப்பதைக் கண்டு **Q17** ________________ பிடித்துக்கொண்டனர். **Q18** ________________ விலை உயர்ந்த பொருள் முல்லாவிடம் இருப்பதால்தான் அவர் அவ்வாறு மறைந்து கொண்டார் எனத் திருடர்கள் நினைத்தார்கள். திருடர்களில் ஒருவன் முல்லா அலமாரியினுள் ஒளிந்துகொண்டதற்கான காரணத்தைக் கேட்டான். அதற்கு முல்லா, " எனக்கு மிகவும் அவமானமாக இருந்தது. அதனால்தான் மறைந்துகொண்டேன்," என்றார்.

"எதற்காக நீர் அவமானப்பட வேண்டும்?" என்று ஒரு திருடன் வினவினான்.
"உங்களைப் போன்ற திருடர்கள் மிகவும் **Q19** ________________
என் வீட்டுக்குளே வந்திருக்கிறீர்கள். நீங்கள் எடுத்துப் போகும் அளவுக்கு விலை உயர்ந்த பொருள் என்னிடம் **Q20** ________________ போய்விட்டதே என்பதை நினைக்கும்போது எனக்கு வெட்கமாகவும் அவமானமாகவும் இருக்கிறது" என்றார் முல்லா. முல்லா கூறியதைக் கேட்டத் திருடர்கள் தாங்கள் வந்திருந்த வேலையையும் மறந்து சிரித்தார்கள்.

Q16. (1) நுழைவதை
(2) பதுங்குவதை
(3) நடமாடுவதை
(4) கொண்டாடுவதை ( )

Q17. (1) அஞ்சி
(2) தயங்கி
(3) பிரமித்து
(4) ஆச்சர்யப்பட்டு ( )



More papers at www.testpapersfree.com

Q18. (1) ஏதோ
(2) மற்றும்
(3) ஆகவே
(4) எனினும் ( )

Q19. (1) ஆவலோடு
(2) சிரமப்பட்டு
(3) கணக்கிட்டு
(4) எதிர்பார்த்து ( )

Q20. (1) சேராமல்
(2) தங்காமல்
(3) இயலாமல்
(4) இல்லாமல் ( )



More papers at www.testpapersfree.com

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் பகுதியை கருத்தூன்றிப் படி.**

ஓர் ஊரில் பெருஞ்செல்வர் ஒருவர் இருந்தார். தம் பணத்தால் எதையும் வாங்க முடியும் என்று நினைத்துக் கொண்டார். அந்த ஊரில் இருந்தவர்களிடம் எல்லாம் " என் செல்வத்தால் வாங்க முடியாத பொருள் ஏதேனும் உண்டா?" என்று **தற்பெருமையுடன்** கேட்டார். " கடவுளை விட அதிக மதிப்பு உள்ளது பணம்தானே . அதனால் இயலாதது உண்டா?" என்றே எல்லாரும் பதில் தந்தார்கள். அந்த ஊருக்கு வந்த துறவி ஒருவர் செல்வரைப் பற்றி கேள்விப்பட்டு அவர் வீட்டிற்குச் சென்றார்.

செல்வரும் துறவியைச் சிறப்பாக வரவேற்றார். " துறவியாரே ! உங்களுக்கு எது தேவையானாலும் சொல்லுங்கள் . என்னிடம் இல்லாவிட்டாலும் எப்படியும் கொண்டு வந்து உங்களிடம் தருகிறேன். என்னிடம் உள்ள பணத்தால் வாங்க முடியாத பொருளே இல்லை," என்று பெருமையுடன் சொன்னார். அதைக் கேட்டதும் கோபமடைந்த **துறவி** , " நிலையில்லாத பணத்தினால் என்ன பயன்? அதனால் வாங்க இயலாத பல பொருள்கள் உள்ளன. இனி இப்படிப் பேசாதே" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றார்.

அன்றிரவு செல்வருக்குத் தூக்கம் வரவில்லை. துறவியின் சொற்கள் அவர் **செவிகளில் ஒலித்துக்கொண்டே** இருந்தன. தன் எண்ணம் சரியானதா, துறவியின் கருத்து சரியானதா என்று **சிந்தித்தபடி** இருந்தார். மறுநாள் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த செல்வரிடம், அவரின் எட்டு வயது மகன் அழுது கொண்டே வந்தான். " மகனே ! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார் அவர்.

"அப்பா! என் அம்மா இறந்துவிட்டதாக என் நண்பர்கள் சொல்கிறார்கள். ஆனால், நீங்களோ அம்மா மேல் உலகம் போயிருக்கிறார். எப்பொழுது வேண்டுமானாலும் திரும்புவார் என்று சொல்கிறீர்கள் . ஆனால் , அம்மா வரவே இல்லை. அங்கிருந்து திரும்பி வருவதற்கு அம்மாவிடம் பணம் இல்லை என்று நினைக்கிறேன். உங்களிடம்தான் ஏராளமான பணம் உள்ளதே . சிறிதளவு பணம் அனுப்பி அம்மாவை உடனே இங்கு வரச் சொல்லுங்கள். இல்லையேல் நீங்களாவது சென்று அவரை அழைத்து வாருங்கள்," என்றான்.

"மகனே! பணத்தினால் செய்ய இயலாத செயல் அது. உனக்கு எப்படிப் புரிய வைப்பேன் என்று எனக்குத் தெரியவில்லை," என்றார் அவர். அன்றே அவரின் **தற்பெருமை நீங்கியது.**



More papers at www.testpapersfree.com

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைத்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q21. செல்வர் கொண்டிருந்த எண்ணம் யாது?

(1) பணம் நிலையில்லாதது
(2) பணத்தினால் எதையும் வாங்கலாம்
(3) பணமே வாழ்க்கைக்கு முக்கியமானது
(4) பணமே கடவுளை விட அதிக மதிப்புள்ளது ( )

Q22. துறவி ஏன் செல்வரின் வீட்டிலிருந்து கோபமாகக் கிளம்பினார்?

(1) துறவிக்கு அவசர வேலை இருந்ததால்
(2) செல்வர் அவரை முறையாக வரவேற்காததால்
(3) செல்வர் அவருக்கு மரியாதை கொடுக்காகத்தால்
(4) செல்வர் பேசிய விதம் துறவிக்குப் பிடிக்காததால் ( )

Q23. செல்வர் எப்பொழுது தம் தவற்றை உணர்ந்தார்?

(1) தன் மகன் தன் அம்மாவை நினைத்து அழுதபோது
(2) துறவி தன் வீட்டிலிருந்து கோபமாக கிளம்பியபோது
(3) தன் மகன் தன் அம்மாவை அழைத்து வரச் சொன்னபோது
(4) தன் மகன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாத தெரியாமல் விழித்தபோது ( )

Q24. இப்பகுதிக்கு ஏற்ற தலைப்பு என்ன?

(1) பணமே உலகம்
(2) செல்வந்தரும் துறவியும்
(3) செல்வந்தரின் தற்பெருமை
(4) பணத்தால் இயலாதது ஒன்றுமில்லை ( )

<u>சொற்பொருள்</u>

**வினா Q25 இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25. நீங்கியது

(1) அகன்றது
(2) சென்றது
(3) நகர்ந்தது
(4) உதிர்ந்தது ( )



More papers at www.testpapersfree.com

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஒலி வேறுபட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

| | | |
|---|---|---|
| Q26. | பருவநிலை மாற்றத்தினால் ___________ தொழில் பாதிப்படைந்துள்ளது. இதனால் விவசாயிகள் வருத்தம் அடைந்துள்ளனர். | Q26 (     ) |
| Q27. | தாய் ___________ சாதத்தில் பருப்பு சேர்த்தார். அவர் அதைத் தன் குழந்தைக்கு ஊட்டினார். | Q27 (     ) |
| Q28. | தொலைக்காட்சியில் ___________ பெண்களுக்காக சேலை அழகு ராணி போட்டி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் பல பெண்கள் கலந்து கொண்டனர். | Q28 (     ) |
| Q29 | ஆரோக்கியமான உணவு முறை முக்கியம். எனவே என் தாயார் எனக்கு ___________ உணவுகளை வாரத்திற்கு இரண்டு முறைதான் கொடுப்பார். | Q29 (     ) |

| | |
|---|---|
| (1) பொரித்த | (5) கன்னி |
| (2) குழைந்த | (6) உழவு |
| (3) உளவு | (7) பொறித்த |
| (4) கண்ணி | (8) குலைந்த |



More papers at www.testpapersfree.com


D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

தமிழ் கலைமன்றம் நடத்தும் ----- குறு நாடகம் எழுதும் போட்டி

எங்கள் இலக்கு --- தமிழில் பேசுவோம் ! தமிழை வளர்ப்போம் !







தமிழ்மொழி மாதத்தில் குறு நாடகத்திற்கு கதை எழுதும் போட்டி!

நீங்கள் 12 முதல் 15 வயது பள்ளி மாணவர்களா?

உங்கள் நாடகம் எழுதும் திறனை வளர்த்துக் கொள்ள ஓர் அறிய வாய்ப்பு!

- போட்டியாளர்களின் திறனை வளர்க்க -- பல நாடகங்கள் எழுதி, அவற்றை அரங்கேற்றிய திருமதி லெட்சுமி ராஜன் ஒரு பயிற்சி பட்டறையை நடத்த வருகிறார்.

கலைமன்றம் நடத்தும் பரிசளிப்பு விழாவில் சிறந்த ஐந்து நாடகங்கள் அரங்கேற்றப்படுவதோடு பரிசுகளும் வழங்கப்படும்.

- முதல் பரிசு --- 500 வெள்ளி
- இரண்டாம் பரிசு -- 200 வெள்ளி
- மூன்றாம் பரிசு --- 100 வெள்ளி
- இருவருக்கு ஆறுதல் பரிசாக 50 வெள்ளி பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

நாள் : 4 டிசம்பர் 2017
இடம் : தமிழ் கலைமன்றம்
9 மணி முதல் 12 மணி வரை குறு நாடகம் எழுதும் பயிற்சிப் பட்டறை
1 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை குறு நாடகம் எழுதும் போட்டி
( மதிய உணவும் சிற்றுண்டியும் வழங்கப்படும் )

**தமிழ் கலைமன்றம்**

**நேரடி பதிவுக்கு -- எண் 112 செராங்கூன் சாலை**

**( இரண்டாம் மாடியில் )**

**தொடர்புக்கு -- 6299 9912 பாமா**



More papers at www.testpapersfree.com

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாக கொண்டு அமைத்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையை கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30. கலைமன்றத்தின் நோக்கம் யாது?

(1) நாடகங்களை நடத்துவது
(2) தமிழ் மொழியை வளர்ப்பது
(3) தமிழ் நிகழ்ச்சிகள் நடத்துவது
(4) கலைமன்றத்தைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பது ( )

Q31. சிறந்த நாடகங்களின் அரங்கேற்றத்தை எப்பொழுது காணலாம்?

(1) மதிய உணவு நேரத்தில் காணலாம்
(2) கலைமன்றத்திற்கு போனால் காணலாம்
(3) கலைமன்றம் நடத்தும் பரிசளிப்பு விழாவில் காணலாம்
(4) திருமதி லெட்சுமி ராஜனின் ஒருநாள் பயிற்சி பட்டறையில் காணலாம் ( )

Q32. நாடகம் எழுதும் திறனை வளர்த்துக்கொள்ள யாருக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது?

(1) சிறுமிகளுக்கு
(2) பள்ளி மாணவர்களுக்கு
(3) தமிழில் பேசுபவர்களுக்கு
(4) நாடகத்தில் நடிப்பவர்களுக்கு ( )

Q33. வெளியூர் பயணம் சென்றுள்ள 13 வயது நிரம்பிய உன் அண்ணன், கதை எழுதுவதில் ஆர்வம் உள்ளவர். அவர் கலைமன்றத்தின் குறு நாடகம் எழுதும் போட்டியில் பங்குபெற்றால் ஏற்படும் ஏதேனும் இரண்டு பயங்களைக் குறிப்பிட்டு ஒரு கடிதம் எழுது.

( 4 மதிப்பெண்கள்)

________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________
________________________________________

இப்படிக்கு ,
அன்புத் தம்பி விஷ்ணு.



More papers at www.testpapersfree.com

**D8 சுயவிடை கருத்தறிதல்**
**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்துன்றிப் படி.**

நேர்மையான குணத்தைக் கொண்டு வாழ்ந்த கந்தன் என்பவனுக்கு இரண்டு **புதல்வர்கள்** இருந்தனர். மூத்தவன் மணிமாறன். இளையவன் இளவழகன். அக்கிராமத்தில் இம்மூவரும் எளிமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வந்தனர். அவ்வருடம் பலத்த மழையினாலும், புயலினாலும் விளைச்சல் குறைந்ததால் போதிய வருமானம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டான் கந்தன்.

இதனால், தன் புதல்வர்களுக்குப் போதுமான உணவை அளிக்க முடியவில்லை. எனவே, தன்னிடம் உள்ள பணத்தைக் கொண்டு வெளியூரில் வியாபாரம் செய்ய நினைத்தான். கந்தன் தன் யோசனையைத் தன் புதல்வர்களிடம் கூறிவிட்டுப் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டான். அவன் சென்ற பாதையோ **அடர்ந்த** காடாக இருந்தது. வெகுதூரம் நடந்ததால் அவனுக்கு தாகம் எடுத்தது. **அந்தி சாயும் நேரமானதால்**, அன்றைய இரவை அக்காட்டில் கழித்திட எண்ணினான். வழியில் அவன் ஓர் ஆற்றைக் **கண்ணுற்றான்**. கந்தன் அதனருகில் சென்று **தாகம்** தீரத் தண்ணீர் குடித்தான். காட்டு விலங்குகளுக்கு **அஞ்சி** அவன் ஒரு மரத்தின் மேல் ஏறி உறங்கினான்.

திடீரென்று யாரோ சிலர் **உரக்க** உரையாடும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்தான். கந்தன் சுற்றும் முற்றும் பார்த்தான். எவரும் தென்படவில்லை. பிறகு மெதுவாகக் கிழே பார்த்தான். அங்கே சிலர் **முகமூடி** அணிந்து கொண்டு கையில் ஒரு பையுடன் உரக்க பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் **பாவனையிலிருந்து** கந்தன் அவர்கள் திருடர்கள் என்பதை உணர்ந்தான். அவர்கள் பேசியதை **செவிமடுத்த** அவன், தான் செல்ல இருந்த ஊரிலுள்ள ஒருவரின் **உடமைகள்** அந்தப் பையில் உள்ளன என்பதைத் தெரிந்து கொண்டான்.

திருடர்கள், தாங்கள் திருடிய பொருள்களை அந்தப் பையினுள் வைத்தனர். பின் அப்பையை அந்த மரத்தின் அடியில் **பதுக்கி** வைத்தனர். பொழுது விடிந்ததும், அவர்கள் பையில் உள்ளவற்றைப் பங்கிட்டுக் கொள்ளலாம் எனத் திட்டமிட்டனர். அவர்கள் சென்றவுடன் கந்தன் கிழே இறங்கி அப்பையை திறந்து பார்த்தான். அதில் விலை உயர்ந்த தங்க நகைகளும், தங்க காசுகளும் இருந்தன. கந்தன் இரவோடு இரவாக அவற்றை எடுத்துக் கொண்டு தன் ஊருக்குப் புறப்பட்டான். செல்லும் வழியில், இப்பொழுது," திருடர்களுக்கும் எனக்கும் எந்த வேறுபாடும் இல்லையே" என்ற **எண்ணம்** அவன் மனத்தில் தோன்றியது. மனம் வருந்திய கந்தன், அவ்வூர்த் தலைவரிடம் அப்பொருள்களைக் கொடுத்தான். தன் வீட்டில் **களவு** போன விலை மதிப்புமிக்க பொருட்களைக் கண்ட அவ்வூர் தலைவர் மனமகிழ்ந்தார்.



More papers at www.testpapersfree.com

கந்தனின் **நற்குணத்தை** ஊர்த்தலைவர் பாராட்டி, அன்பளிப்பாக சில தங்க நாணயங்களை அளித்தார். அத்துடன் தம் ஊரில், கந்தன் வியாபாரம் செய்ய ஏற்பாடு செய்து தருவதாகவும் மற்றும் அவ்வூரிலேயே **வசிக்கும்படியும்** அவனிடம் கேட்டுக்கொண்டார். கந்தன் தம் புதல்வர்களை வரவழைத்து அவ்வூரில் **வளமாக** வாழ்ந்தான்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)**

Q34. கந்தன் ஏன் துன்பப்பட்டான்? ( 2 மதிப்பெண்கள் )

Q35. கந்தன் பக்கத்து ஊருக்குச் செல்ல காரணம் என்ன ? ( 3 மதிப்பெண்கள் )

Q36. தூக்கத்திலிருந்து எழுந்த கந்தன் எவற்றை உணர்ந்தான்?
( 4 மதிப்பெண்கள் )



More papers at www.testpapersfree.com

Q37. திருடிக் கொண்டு வந்த பொருள்களைத் திருடர்கள் என்ன செய்வதென்று முடிவெடுத்தனர்? ( 3 மதிப்பெண்கள் )

Q38. "திருடர்களுக்கு எனக்கும் எந்த வேறுபாடும் இல்லை" என்னும் தொடர் எதை உணர்த்துகிறது? ( 3 மதிப்பெண்கள் )

Q39. கந்தன் நேர்மையானவன் என்பதை நாம் எவ்வாறு அறியலாம்? ( 4 மதிப்பெண்கள் )

Q40. கந்தனுக்கு வசதியான வாழ்கை அமைய எவை காரணங்களாக இருந்தன? ( 3 மதிப்பெண்கள் )





More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# MGS PAPER 2

## தொடக்க நிலை 6

| | | | |
|---|---|---|---|
| வி1) 3 | வி11) 3 | வி21) 2 | வி31) 3 |
| வி2) 4 | வி12) 4 | வி22) 4 | வி32) 2 |
| வி3) 1 | வி13) 1 | வி23) 4 | |
| வி4) 2 | வி14) 2 | வி24) 3 | |
| வி5) 2 | வி15) 2 | வி25) 1 | |
| வி6) 4 | வி16) 3 | வி26) 6 | |
| வி7) 2 | வி17) 4 | வி27) 2 | |
| வி8) 1 | வி18) 1 | வி28) 5 | |
| வி9) 2 | வி19) 4 | வி29) 1 | |
| வி10) 1 | வி20) 3 | வி30) 2 | |

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

33) பல நாடகங்களை எழுதி அமற்றை
33) அரங்கேற்றிய திருமதி லெட்சுமி ராஜன் நடத்தும் பட்டறையில் பங்கு கொண்டு நாடகம் எழுதும் திறனை வளர்த்துக் கொள்ளலாம். அதன் மூலம் சிறந்த நாடகம் எழுதி பரிசு பெறுவதுடன், விழாவில் சிறந்த ஐந்து நாடகங்கள் அரங்கேற்றப்படுவதையும் கண்டு களிக்கலாம்.

34) அவ்வாண்டு பெய்த பலத்த மழையினாலும், புயலினாலும் விளைச்சல் குறைந்து போதிய வருமானம் இல்லாமல் சிரமப்பட்டான். அதனால் கந்தன் துன்பப்பட்டான்.

35) கந்தன் தன்னிடம் உள்ள பணத்தை கொண்டு வெளியூர் சென்று வியாபாரம் செய்ய எண்ணினான். இதுவே கந்தன் பக்கத்து ஊருக்குச் செல்ல காரணம் ஆகும்.

36) தூக்கத்திலிருந்து எழுந்த கந்தன் மரத்திற்கு கீழே முகமூடி அணிந்த சிலர் ஒரு பையுடன் உரக்க பேசிக்கொண்டிருந்ததையும் மேலும் அவர்களின் பாவனையிலிருந்தும் அவர்கள் திருடர்கள் என்பதை உணர்ந்தான்.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

37) திருடிக் கொண்டு வந்த பொருட்களை மரத்தின் அடியில் பதுக்கி வைத்து விட்டு மறுநாள் பொழுது விடிந்ததும் அவற்றை பங்கிட்டுக் கொள்ளலாம் என திருடர்கள் முடிவெடுத்தனர்.

38) திருடர்களிடம் இருந்து அபகரித்த பையில் உள்ள விலை உயர்ந்த தங்க நகைகள் மற்றும் காசுகளை எடுத்துக் கொண்டு கந்தன் இரவோடு இரவாக ஊருக்கு புறப்பட்டான். இச்செயலையே ~~இரவோடு~~ "திருடர்களுக்கும் எனக்கும் எந்த வேறுபாடும் இல்லை" என்னும் தொடர் உணர்த்துகிறது.

39) திருடனுக்கும் தனக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்பதை உணர்ந்த கந்தன் தன் செயலை எண்ணி வருந்தினான். பின் அவ்வூர்த் தலைவரிடம் அப்பொருளை கொடுத்தான். இச்செயலிருந்து கந்தன் நேர்மையானவன் என்பதை அறியலாம்.

40) மற்றவர் பொருள் மீது ஆசைப்பட்டது தவறு என்பதை உணர்ந்து உரியவரிடம் பொருளை கொடுத்ததும், மேலும் நேர்மையான குணத்தை கொண்டு வாழ்ந்தது. இவையே கந்தன் வசதியான வாழ்க்கை அமைய காரணங்களாக இருந்தன.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com